


**13.05.2024**

## 20. 'தெய்வ அன்பின்' புனிதமே, நமக்கு வேண்டும்!

**நா**ம் "ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக்கடவோம்!" என்ற கட்டளை "தேவனை அறிந்தவர்களுக்குரிய" ராஜரீக கட்டளையாகும்! (1யோவான்4:7,யாக்2:8). ஆகிலும், 'தேவனை அறியாத' உலகத்துக் குரியவர்களும் 'ஒருவரையொருவர் நேசத்தை' பேசுகிறார்கள் என்றும் ..... உலகத்துக்குரிய மானிட அன்பிற்கே, இந்த உலகம் செவி கொடுக்கிறது! என 5-ம் வசனம் வேறு பிரித்து காண்பிக்கிறது. இரட்சிக்கப்பட்டு, சபையில் பல வருடங்களாகியும் "இயேசுவின் சீஷனாய் மாறாத" விசுவாசிகள், இந்த வேறுபாட்டை அறியாதபடியால், இந்த "உலக அன்பில்" சேதமடைகிறார்கள்!

'அன்பு' தேவனுக்குரியது! எனவும், தேவனால் பிறந்தவனுக்கே அது சொந்தம்! எனவும் 7-ம் வசனம் கூறுகிறது! அப்படியிருக்க, 'மனுஷீக அன்போ' சொந்தம் - பந்தம் தொடங்கி, உலகப்பொருளை சுற்றிச் சுற்றியே 'அன்பு' என கூறிக்கொள்ளும்! அதை இன்னமும் கொச்சைப்படுத்தி "LOVE = காதல்" எனவும் கூறிக்கொள்ளும்!

புனித வேதத்தில் 'காதல்' என்ற வார்த்தைக்கு இடமேயில்லை!

**- ரத்னம்**